# 2 ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி

## மறுமலர்ச்சி

### அறிமுகம்

ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியானது உலக வரலாற்றில் முக்கிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. இப்பாடத்தைக் கற்பதன் மூலம் மறுமலர்ச்சி என்றால் என்ன? அதற்குப் பின்னணியாக இருந்தவை எவை மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட வர்த்தக முன்னேற்றம், அறிவு வளர்ச்சி, சித்திரம், கட்டடக்கலை என்பவற்றில் ஏற்பட்ட முன்னேற்றம், விஞ்ஞானம் மெய்யியல், அரசியல் என்பனவற்றில் ஏற்பட்டமாற்றங்களோடு நாடுகாண் பயணங்கள், அவைகளோடு தொடர்புடையோர் பற்றியும் அறியலாம்.



மொனாலிஸா



இறுதி இராப்போசன விருந்து

இந்த சித்திரத்தை நீங்கள் பார்த்ததுண்டா?
இந்த சித்திரம் யாரால் வரையப்பட்டது?
அவர் எந்த யுகத்தில் வாழ்ந்தவர்?
அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர்?



இலவச விநியோகத்திற்காக

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை காண்பதுடன் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி பற்றியும், அது உலகின் ஏனைய பகுதிகளில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது பற்றியும் இந்த அத்தியாயத்தில் கற்போம்.

மறுமலர்ச்சி என்றால் என்ன?
மறுமலர்ச்சி என்றால் மீண்டும் மலர்தல் என்பதாகும்
மறுமலர்ச்சி என்பதனை இரு விதத்தில் விளக்கலாம்.

(1) மறைந்து போன புராதன கிரேக்க, ரோமப் பண்பாடுகள் மீண்டும் புத்துயிர்ப்படைந்து மக்களின் உயர்ச்சிக்கு உதவியமை மறுமலர்ச்சி எனப்படும்.

(2) 14ம், 15ம், 16ம், நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதாரம், சமயம், விஞ்ஞானம், இலக்கியம், கலை போன்ற துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியே மறுமலர்ச்சி எனப்படும்.

அதன்படி 14ம், 15ம், 16ம், நூற்றாண்டுகளில் கிரேக்க - ரோமப் பண்பாட்டினைப் பெற்று ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு, விஞ்ஞானம் போன்ற துறைகளில் ஏற்பட்ட எழுச்சியே மறுமலர்ச்சி எனலாம். ஐரோப்பாவை மத்திய காலத்தில் இருந்து நவீன காலத்துக்குள் பிரவேசிக்கச் செய்த மாபெரும் சக்தியாக மறுமலர்ச்சி விளங்குகினறது.

## மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான பின்னணி

மத்திய காலத்தில் கிரேக்க, ரோம தத்துவச் சிந்தனைகளைக் கற்பது முழுமையாகக் கைவிடப்பட்டிருந்தது. ஆயினும் கி.பி 1453இன் பின்னர் கிரேக்க ரோம நூல்களை பரிசீலித்ததன் மூலம் இந்நிலைமை மாற்றமுறத் தொடங்கியது. அந்நூல்களைக் கற்றவர்கள் தர்க்கரீதியாகச் சிந்திக்கத் தொடங்கினர். அத்தோடு மத்திய காலத்தை பற்றி கற்பதைக் கைவிட்டு, கிரேக்க ரோம இலக்கியங்களிலும், கருத்துக்களிலும் மீளவும் கற்பதற்கான புத்துணர்ச்சி ஏற்பட்டது.இதற்கமைய மறைந்து போன கிரேக்க, ரோம நாகரீகங்கள் மீளவும் ஐரோப்பாவில் பிரசித்தி பெற்றதன் மூலம் மறுமலர்ச்சிக்குத் தேவையான பின்னணி உருவாகியது. மத்திய காலத்தில் ஐரோப்பாவில் நிலவிய சூழ்நிலை (மானிய முறை) பற்றி 7ஆம் தரத்தில் கற்றவை உங்களுக்கு நினைவிருக்கலாம். 15ஆம், 16ஆம் நூற்றாண்டுகளில் மத்திய ஐரோப்பாவில் நிலவிய அனைத்து முறைகளும் அழிந்து புதிய முறைகள் பல உதயமானதைப் பல நிலைகளிலும் காணக்கூடியதாக இருந்தது.

| மத்திய யுகத்தில் இருந்த நிலைமை | மறுமலர்ச்சி யுகத்தின் பின் இருந்த நிலைமை |
| --- | --- |
| ❈ அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தது | ❈ அரசியல் அதிகாரம் ஒருமுகப்படுத்தப்பட்டது |
| ❈ சுயதேவைப் பூர்த்திப் பொருளாதார முறைமை | ❈ வர்த்தக விருத்தியும், பணப்புழக்கமும் அதிகரித்தமை. |
| ❈ பரம்பரை பிரபுக்களின் தலைமை | ❈ கற்ற மத்திய வர்க்கத்தினரின் தலைமை |
| ❈ சமய ஒற்றுமை காணப்பட்டது | ❈ சமய வேற்றுமைகள் ஏற்பட்டு மதப்பிரிவுகள் ஏற்பட்டன. |
| ❈ பாப்பரசரினதும், கிறிஸ்தவ திருச்சபையினதும் அதிகாரம் நிலவியமை. | ❈ பாப்பரசரினதும், கிறிஸ்தவ திருச்சபையினதும் அதிகாரம் வீழ்ச்சியுற்றமை |
| ❈ கல்வி, கலைத்துறைகளில் சமயச் செல்வாக்குக் காணப்பட்டமை | ❈ கல்வி, சமய துறைகளில் லௌகீகம் செல்வாக்குப் பெற்றமை |
| ❈ கல்வியில் சமயப் போதனை முதலிடம் பெற்றது. | ❈ லௌகீக வாழ்க்கைக்குத் தேவையான கணிதம், சமூகவியல், இயற்கையியல் போன்ற விடயங்களைக் கற்றல் |

- அதிகாரம் ஒருமுகப்படுத்தப்படுதல் என்பது அரசாங்கத்திடம் அதிகாரங்களை ஓரிடப்படுத்தல் என்பதாகும்.
- அதிகாரப்பரவலாக்கம் என்பது அரசாங்கத்திடம் காணப்படும் அதிகாரங்கள் பிரிந்து செல்லல் என்பதாகும்.

அட்டவணையில் காணப்படும் விதமாக மத்திய காலத்தில் நிலவிய மானிய முறை தளர்வுற்று ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்படுவதில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தின. இவ்வாறான காரணிகள் எவையென ஆராய்வோம்.

## ஆதிகாலம் முதல் நிலவிய கிழக்கு, மேற்கு வர்த்தகத்திற்கு இடையூறு ஏற்பட்டமை

கி.பி 1453 ஒட்டோமன், துருக்கியரால் கிழக்கு ரோமப் பேரரசின் தலைநகரான கொன்ஸ்தாந்திநோபிள் கைப்பற்றப்பட்டமையே மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு உடனடிக் காரணமாக அமைந்தது.

**கொன்ஸ்தாந்திநோபிள் நகரின் முக்கியத்துவம்**

- கிழக்கு ரோமப் பேரரசின் தலைநகராக விளங்கியது கொன்ஸ்த்தாந்தி நோபிள் எனப்படும் பைசாந்திய நகரமாகும். அத்துடன் இந்நகரம் ஐரோப்பிய கிறிஸ்தவ நாடுகளின் வர்த்தக மத்திய நிலையமாகவும் விளங்கியது.
- பழைய கிரேக்க, ரோமப் பண்பாட்டின் பெறுமதி வாய்ந்த நூல்களைக் கொண்ட ஐரோப்பாவின் பெரிய நூலகம் அமைந்திருந்ததும் இந்நகரிலேயே ஆகும்.
- ஆசியாவிலிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டு வரப்பட்ட பொருட்களின் வணிகப் பாதைகளின் மத்திய நிலையமும் இதுவாகும்.
- அராபியர் ஆசியாவிலிருந்து வர்த்தகப் பொருட்களைக் கொன்ஸ்தாந்தி நோபிளுக்குக் கொண்டு வந்ததுடன், ஐரோப்பிய வர்த்தகர் அப்பொருட்களைப் பெற்றுப் பெரும் இலாபத்துடன் அவற்றை ஐரோப்பா முழுவதும் விநியோகித்தனர்.
- வெனிஸ், ஜெனோவா, பீசா, புளோரன்ஸ் முதலான இத்தாலிய நகரங்கள் கொன்ஸ்தாந்திநோபிளுடன் தொடர்பு கொண்டன.
- இந்தியாவின் வாசனை சரக்குகள், பருத்தி, இலங்கையின் மாணிக்கக் கற்கள், முத்து, யானைத் தந்தம், வாசனைப் பொருட்கள் சீனாவின் பட்டு, மட்பாண்டங்கள் இங்கு விற்பனையான முக்கிய பொருட்களாகும்.

மேல் நாட்டு கீழ் நாட்டு வர்த்தக மத்திய நிலையமாக விளங்கிய கொன்ஸ்தாந்திநோபிள் நகர் துருக்கியரால் கைப்பற்றப்பட்டதால் இந்தப் பொருட்களைக் கொண்டு செல்லும் பாதை தடைப்பட்டது. அத்தோடு துருக்கியரால் அப் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்டதால், அப்பொருட்களின் விலை அதிகமானது. உணவுப் பொருட்கள் பழுதடையாமல் நீண்ட நாட்கள் வைத்திருப்பதற்கு வாசனைப் பொருட்கள் ஐரோப்பியர்களுக்கு மிகவும் பயன்பட்டது. மேலும்

- துருக்கியர் ஐரோப்பாவுக்குக் கொண்டு வரும் பொருட்களை மட்டுப்படுத்தினர்.
- உரிய நேரத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்ளாததால் ஐரோப்பியர் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர்.
- இதனால் ஐரோப்பிய உயர்நிலைக் குடிமக்களுக்குத் தேவையான உயர் ரகப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.
- இது ஐரோப்பிய வர்த்தகர்களை மிகவும் பாதித்தது. வர்த்தகத்தின் மூலம் கிடைத்த இலாபம் குறையத் தொடங்கியது.



**கொன்ஸ்தாந்திநோபிள் நகர்**

இதனால் தமக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டுக் கீழ் நாடுகளுக்குச் செல்ல புதிய பாதையைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

**செயற்பாடு**

கொன்ஸ்தாந்திநோபிள் நகரத்தின் முக்கியத்துவத்தை விபரித்துப் பத்திரிகைக்குக் கட்டுரை எழுதுக.

ஐரோப்பிய நாடுகள் புதிய வழி கண்டு பிடிப்பதில் முக்கிய கவனம் செலுத்தின. இதனால் நாடுகாண் பயணங்கள் ஆரம்பமாகின. அதன் விளைவாகத் தாம் எதிர்ப்பார்த்தபடி கீழ் நாடுகளுக்குச் செல்வதற்கு ஐரோப்பியர்களால் முடிந்ததுடன் புதிய நாடொன்றைக் (அமெரிக்காக் கண்டம்) கண்டுபிடிக்கவும் அவர்களால் முடிந்தது. அவ்வாறே உலகம் முழுவதும் குடியேற்ற நாடுகளை அமைக்கவும் அவர்களால் முடிந்தது.

ஒட்டோமன் துருக்கியரால் கொன்ஸ்தாந்திநோபிள் கைப்பற்றப்பட்டதும், அங்கிருந்த கிறிஸ்தவக் கல்விமான்கள் கிரேக்க ரோம நூல்களுடன் ஐரோப்பாவுக்குக் குறிப்பாக இத்தாலிக்குச் சென்றனர். ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் இருந்த கல்விமான்கள் அவற்றை வரவேற்று ஆராயத் தொடங்கினர். இத்தாலியில் புளோரன்ஸ், பீசா, பொலஞ்ஞா போன்ற பல்கலைக்கழகங்களிலுள்ள அறிஞர்கள் அந்நூல்களைக் கற்றனர். இதன் விளைவாகப் பண்டைய கிரேக்க, ரோம நாகரிகங்கள் மீண்டும் எழுச்சி பெற்றன. இது மறுமலர்ச்சிக்கான கல்விசார், அறிவு சார் பின்னணியை ஏற்படுத்தியது.



இலவச விநியோகத்திற்காக

## பல்கலைக்கழகங்கள் தோன்றுதல்

a) கி.பி ஐந்தாம் நூற்றாண்டு உரோமின் வீழ்ச்சியுடன் கிறிஸ்தவ துறவற மடங்களை மையமாகக் கொண்ட கல்வி நிறுவனங்கள் தோன்றின. கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு முதற்கொண்டு பேராலயத்தினை மையமாகக் கொண்ட கல்வி நிறுவனங்கள் தோன்றின.

| இக்காலத்தில் தோன்றிய | | பல்கலைக்கழகங்கள் |
|---|---|---|
| இத்தாலி | - | பொலஞ்ஞா, பாதுவா |
| பிரான்ஸ் | - | பாரிஸ் |
| இங்கிலாந்து | - | ஒக்ஸ்போர்ட், கேம்பிரிஜ் |

b) கி.பி 1090 ஆம் ஆண்டு ஆரம்பமான முதலாவது பல்கலைகழகமான இத்தாலியில் பொலஞ்ஞா பல்கலைக்கழகம், கிறிஸ்தவ சபை சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியதுடன், இரண்டாவது பல்கலைக்கழகமான பாரிஸ் பல்கலைக்கழகத்தின் அடிப்படை (முக்கிய) பாடமாக விளங்கியது இறையியலாகும். இவை தவிர்ந்த ஸ்பானியாவில் சலமனிக்கா, பிரித்தானியாவில் கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்போர்ட் போன்ற பல்கலைக்கழகங்கள் தோன்றின. கி.பி 1500ம் ஆண்டளவில் ஐரோப்பாவில் 90 பல்கலைக்கழகங்கள் இருந்தன. இந்தப் பல்கலைக் கழகங்கள் சுதந்திர சிந்தனைகளுக்கு வழிவகுத்தன.

c) 12ஆம் நூற்றாண்டின் பின்னர் பல்கலைகழகப் பாடநெறிகள் மாற்றமடையத் தொடங்கின விஷேடமாக இத்தாலியப் பல்கலைக்கழகங்கள் லௌகீகப் பாடங்களில் அதிக கவனம் செலுத்தின. சட்டத்துறை, வைத்திய துறை பாடங்களில் குறிப்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. 15ஆம் நூற்றாண்டாகும் போது பல்கலைக்கழகங்கள் வேகமாக வளர்ச்சி கண்டன. அப்பல்கலைக்கழகங்கள் கிரேக்க, உரோம நூல்கள் மூலம் கிடைத்த அறிவைக் கொண்டு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டன. எனவே அழிந்து போயிருந்த கிரேக்க, உரோம அறிவியல் மற்றும் கலைத்துறைகளில் மீண்டும் மலர்ச்சி ஏற்பட்டது.

மத்திய காலத்தில் கிரேக்க, உரோம நாகரிக இலட்சணங்களைக் கற்பது முற்றாக இல்லாதொழிந்திருந்தது. ஆயினும் 1433 ஆம் ஆண்டின் பின்னர் மீண்டும் கிரேக்க, உரோம நூல்கள் பயிலப்பட்டதன் பின்னர் அழிந்திருந்த அவ்வுயர் நாகரிக, கலாசார அம்சங்கள் மீண்டும் ஐரோப்பாவில் பிரபல்யமடைந்ததன் மூலம் மறுமலர்ச்சிக்கான பின்னணி உருவானது.

மறுமலர்ச்சி, ஐரோப்பா முழுவதும் வேகமாகப் பரவுவதற்கு அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமை முக்கிய காரணமாகும். மத்திய காலத்தில் நூல்கள் கைகளால் எழுதப்பட்டமையால் அவைகளை எழுதுவதற்கு நீண்ட காலம் சென்றது.

மேற்கு, கிழக்கு நாடுகளிடையே இருந்த தொடர்பால் சீனாவில் இருந்த அச்சு தொடர்பான அறிவினை ஐரோப்பா பெற்றிருந்தது. அதன் விளைவாக ஜேர்மன் இனத்தவரான ஜொஹன்னஸ் கூட்டன்பேர்க் அச்சியந்திரத்தைக் கண்டு பிடித்தார். இதனால் நூல்கள் அச்சிடப்பட்டதுடன், கருத்துக்கள் விரைவாகப்பரவின.

மறுமலர்ச்சி விரிவான முறையில் பரவியமைக்கு இன்னுமொரு காரணியாய் அமைவது சிலுவை யுத்தங்கள் நடைபெற்ற காலத்தில் வர்த்தகம் விருத்தியடைந்தமையாகும். இதன் அடிப்படையில் விஷேடமாக இத்தாலிய நகரங்களின் விருத்தியில் கவனம் செலுத்துவதற்கான ஓய்வும், பணமும் கிட்டியது. இதில் இத்தாலியின் புளோரன்ஸ் நகர மெடிசி குடும்பத்தினர் உதாரணமாகக் கொள்ளத்தக்கவர்கள்.



முதலாவது அச்சியந்திரம்



ஜொஹன்னஸ் கூட்டன் பேர்க்

# கல்வி மறுமலர்ச்சி


கல்வி மறுமலர்ச்சி முதன்முதல் இத்தாலியிலேயே ஆரம்பித்தது. அதற்குப் பங்களித்த காரணிகள் பலவாகும்.

1. பங்களிப்புச் செய்யக்கூடிய பணக்கார வர்க்கத்தினர் காணப்பட்டமை.
2. புராதன கிரேக்க ரோம நாகரிகத்தின் மத்திய நிலையமாக இது திகழ்ந்தமையால் அவற்றின் எச்சங்கள் அங்கு காணப்பட்டமை.
3. கொன்ஸ்தாந்திநோபிளிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பழம்பெரும் நூல்கள் பலவும் இத்தாலியில் கிடைக்கப்பெற்றமை.
4. பல முக்கியமான பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டமை.

15 ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் மொழி, இலக்கியம், சித்திரம், சிற்பம், கட்டடக் கலை ஆகியவற்றில் ஏற்பட்ட எழுச்சியையே கல்வி மறுமலர்ச்சி குறிக்கின்றது. கீழ் நிலையில் இருந்த கிரேக்க ரோம பண்பாடு மீண்டும் எழுச்சி பெறுதல் இக் காலத்தில் ஏற்பட்ட பிரதான மாற்றமாகும்.

கொன்ஸ்தாந்திநோபிளிலிருந்து கொண்டு வரப்பட்ட நூல்களைக் கற்றதன் விளைவாக மக்கள் லௌகீக ரீதியாகச் சிந்திக்கவும், செயற்படவும் விளைந்தனர். இதனால் இலக்கியம், சித்திரம், கட்டடக்கலை, சிற்பம், சங்கீதம் ஆகிய சகல துறைகளிலும் கிரேக்க, உரோம முறையில் தம்மை இசைவாக்கம் செய்ய விளைந்தனர்.

**மறுமலர்ச்சிக் காலத்தில் முன்னேற்றமடைந்த துறைகள்**



## மொழிகளின் மறுமலர்ச்சி

கல்வி மறுமலர்ச்சியின் விளைவாகப் பழைய கிரேக்க, இலத்தீன் மொழிகள் புத்துயிர் பெற்றன. மத்திய காலத்தில் கிரேக்க மொழி முற்றாக மறைந்து போய் இறந்த மொழியாக இருந்தது. அக்காலத்தில் சமய நிகழ்வுகளிலும் சட்டம் தொடர்பான விடயங்களிலும் மாத்திரம் இலத்தீன் மொழி ஓரளவுக்குப் பயன்படுத்தப்பட்டது. மறுமலர்ச்சி காலத்தில் கிரேக்க, இலத்தீன் நூல்களை அதிகமாக வாசித்ததால் அம்மொழிகள் புத்துயிர் பெற்றன. அவ்வாறே கிரேக்க இலத்தீன் மொழி கற்பதும் பெருமையாகக் கருதப்பட்டது. இதனால் ஐரோப்பா முழுவதும் இலக்கிய வளர்ச்சி காணப்பட்டது.

## கலை (ஓவியக்கலை - சிற்பக்கலை)

மறுமலர்ச்சியின் விளைவாகப் பல்வேறு கலைகளிலும் முன்னேற்றம் காணப்பட்டது. இதற்கு கிறிஸ்தவ சபையும் ஊக்கமளித்தது. அக்காலத்தில் சமயத்தில் பக்தியை ஏற்படுத்துதலே கலையின் முக்கிய நோக்கமாக இருந்தது. ஆலயத்தை அலங்கரிக்கும் பொருட்டும் பல சித்திரங்கள் வரையப்பட்டன. கிரேக்க உரோமப் பண்பாட்டின் தாக்கத்தின் காலமான மறுமலர்ச்சிக் காலம் இரசனையை நோக்கமாகக் கொண்டு கலைகள் எழுந்த காலமாகும். சமயக் கருத்துக்கள், ஒழுக்கக் கருத்துக்கள் என்பனவற்றிற்கு முதலிடம் கொடுப்பதற்குப் பதிலாக மனிதத்துவத்தை வெளிப்படுத்தும் லௌகீக இரசனையுடைய கலைகள் தோன்றலாயின. இது வரை சமய சார்பானவர்களின் உருவங்களே கலைகளில் முக்கிய இடம் பெற்றன. 15ம் நூற்றாண்டின் பின்னர் அரசர்களதும், அரசிகளதும் மற்றும் செல்வந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களதும் உருவங்களும் கலைகளில் முக்கிய இடம் பெற்றன.

மறுமலர்ச்சிக் காலத்தில் லௌகீகத்தை உயர்வாகக் கருதும் செல்வந்தர்கள் கலைகளுக்கு ஆதரவளிக்க முன் வந்தனர். இக்காலத்தில் ஏற்பட்ட கருத்துப் புரட்சியினால் சில குருமார்களும் கவரப்பட்டனர். பாப்பரசரும் மறுமலர்ச்சிக் கால கலைஞர்களுக்கு அனுசரணையாக இருந்தார். 5ம் நிக்கலஸ், 6ம் அலெக்சாண்டர், 2ம் ஜுலியஸ், 10ஆம் லியோ போன்ற பாப்பரசர்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். கலைஞர்களுக்குத் தம் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைத்தது. கலைப்படைப்புக்களை உருவாக்கியவர்களின் பெயரில் கலைகள் வெளியாகின.

மறுமலர்ச்சிக் காலத்தில் கலைகளின் மத்திய நிலையமாக விளங்கியது இத்தாலியின் புளோரன்ஸ் நகரமாகும். புளோரன்ஸ் நகரைப் புகழ் வாய்ந்த மத்திய நிலையமாக்குவதில் புளோரன்ஸ் நகரின் மெடிசி குடும்பத்தாருக்குப் பெரும் பங்குண்டு. செல்வந்த அறிஞரான லோரென்சோ டி மெடிசி புளோரன்ஸ் நகரில் கலை நிலையமொன்றை ஆரம்பித்தார். கலைகளின் வளர்ச்சிக்காக அவர் பிரசித்தி பெற்ற கலைஞர் பலரை ஆதரித்தார். பலர் இங்கு வந்து

பயிற்சி பெற்றனர். புளோரன்ஸ் நகரில் கலைஞர்கள் பலர் இருந்தனர். அவர்களில் புரோலிப்போலிப்பி, மசாக்சியோ, பொட்டி செல்லி, ரபாயேல், லியனாடோ டாவின்சி, மைக்கல் ஆஞ்சலோ ஆகியோர் முக்கியமானவர்கள்.

- லியனாடோ டாவின்சி கி.பி 1452 ம் ஆண்டு இத்தாலியில் புளோரன்ஸ் நகரில் பிறந்தார்.
- புளோரன்ஸ் நகரின் பிரசித்தி பெற்ற ஓவியரான வெரோக்கியோவின் கீழ் அவர் ஓவியக் கலையைப் பயின்றார்.
- பின்னர் புளோரன்ஸ் நகரில் கலையகம் அமைத்து, அங்கு புகழ் வாய்ந்த ஓவியராக மக்களின் மதிப்பிற்குள்ளானார்.
- ஓவியத்தில் அன்றும் இன்றும் அவரது புகழை எடுத்துக் காட்டும் ஓவியமாக விளங்குவது அவரால் வரையப்பட்ட 'இயேசுவின் இறுதி இராப்போசனம்' என்ற ஓவியமாகும். மிலானில் புனித மரியாள் கன்னியர் இல்லத்தின் சுவர் முழுவதும் மூடியதாக அவரது இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது.
- அவரது புகழ் வாய்ந்த மற்றைய ஓவியம் 'மொனாலிசா' என்பதாகும். தாய்மையின் அன்பையும், இரக்கத்தையும் அது வெளிப்படுத்துகிறது.

  தற்போது அந்த ஓவியம் பிரான்சில் லூவர் தொல்பொருள் நிலையத்தில் உள்ளது.
- இயற்கையை வெளிப்படுத்தும் ஓவியங்கள் வரைவதற்கு முயன்ற அவர், அதன்பொருட்டுப் புது முறைகளைக் கையாண்டதுடன் எண்ணெய் வர்ணங்களின் பிரயோகக்கையம் பரிசீலித்துப் பார்த்தார்.



லியனாடோ டாவின்சி



கற்பாறையில் அமர்ந்திருக்கும் கன்னி மரியாளின் உருவம்



வானதூதுர் கன்னிமரியாளுக்கு இயேசுவின் பிறப்பை அறிவித்தல் (லியனாடோ டாவின்சியின் மற்றுமொரு சித்திரம்)




இலவச விநியோகத்திற்காக

## மைக்கல் ஆஞ்சலோ (கி.பி 1475 - 1567)

- மைக்கல் ஆஞ்சலோ கி.பி 1475 ம் ஆண்டு புளோரன்ஸ் நகரில் பிறந்தார்.
- புளோரன்ஸ் நகர பணம் படைத்த வர்த்தகராக விளங்கிய லோரேன்சோத மெடிசி அவருக்கு அனுசரணையாக இருந்தார்.
- மைக்கல் ஆஞ்சலோ திறமை வாய்ந்த ஓவியக் கலைஞர், சிற்பக் கலைஞர் மட்டுமல்லாது சிறந்த கட்டடக் கலைஞராகவும் திகழ்ந்தார்.
- பாப்பரசர் இரண்டாம் ஜூலியசின் வேண்டுகோளுக்கிணங்க உரோமில் வத்திக்கான் மாளிகையில் உள்ள சிஸ்டைன் தேவாலய பாவுகையில் (விதானத்தில்)அவர் வரைந்த ஓவியங்கள் அவரது சிறந்த படைப்புகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.
- இறுதித் தீர்ப்பு ( Last judgement) எனும் ஓவியம் அவரது படைப்புக்களில் முக்கிய இடம் பெறுகிறது.


மைக்கல் அஞ்சலோ


இறுதித்தீர்ப்பு


சிஸ்டைன் பாவுகையில் (விதானம்) வரையப்பட்டுள்ள சித்திரம்

* மறுமலர்ச்சிக் காலத்தில் இத்தாலியில் வாழ்ந்த சிறந்த சித்திர சிற்பியான ரபாயேல் கி.பி 1483 ஆம் ஆண்டு ஊர்பினோ நகரில் பிறந்தார்.
* அவரது தந்தை ஒரு ஓவியர்.
* புளோரன்ஸ் நகர் சென்று அங்கு கலையகம் ஒன்றைத் திறந்தார்.
* ரபாயேலின் ஓவியங்களில் கிரேக்கப் பண்பாட்டின் தாக்கம் காணப்படுகிறது.
* அவரது அநேகமான சித்திரங்கள் இயேசுவையும், மரியாளையும் கொண்டதாகவே காணப்படுகின்றன.
* அவரது ஓவியங்களில் சிஸ்டைனிலுள்ள கன்னிமரியாளின் ஓவியம் சிறப்பு வாய்ந்ததாகும்.
* அதன் சாந்தமும், அலங்காரமும் இரசிகர்களைக் கவர்வதாக உள்ளது.
* எதென்சின் பாடசாலை எனும் ஓவியமும் முக்கியமானதாகும்.



எதென்ஸில் அமைந்துள்ள பாடசாலை

## சிற்பக்கலை

மறுமலர்ச்சியின் விளைவால் தாக்கத்தை ஏற்படுத்திய மற்றுமொரு கலை சிற்பக் கலையாகும். கிரேக்க ரோம பண்பாட்டிற்கு அமைய உருவங்கள் அமைத்தல் இக்காலத்தில் ஆரம்பமானது.


பளிங்குக் கற்களால் உருவங்கள் அமைத்தல் இக்காலத்தில் சிறப்பாகக் காணப்பட்டது. இக்காலத்தில் இருந்த சிற்பிகளுள் மைக்கல் ஆஞ்சலோ, டொனெடெலோ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

## மைக்கல் ஆஞ்சலோ


* மைக்கல் ஆஞ்சலோவின் படைப்புகள் இயற்கையாகவும், உயிர்த் துடிப்புள்ளவையாகவும் காணப்படுகின்றன. புளோரன்ஸ் அக்கடமியில் உள்ள அவரது 'டேவிட்' உருவச்சிலை மிகவும் சிறப்பு வாய்ந்த படைப்பாகும்.

* உரோமில் புனித பேதுரு ஆலயத்திலுள்ள இயேசுவையும், மரியாளையும் சித்தரிக்கும் 'பீட்டா' (பியெட்டா) எனும் சிற்பம், மோசஸின் உருவம் ஆகியவை அவரது திறமையை எடுத்துக்காட்டுபவையாகும்.

* மைக்கல் ஆஞ்சலோவுக்கு ஆதரவு நல்கிய லோரன்சோத மெடிசியின் பளிங்குச் சிலை இவரது அபூர்வ நிர்மாணங்களுள் ஒன்றாகும்.


மோசஸ்


(இயேசுவும் மரியன்னையும்)


தாவீது (டேவிட்)

## டொனெடெலோ



* இக்காலத்திலிருந்த மற்றுமொரு சிற்பி டொனெடெலோ என்பவராவார். புளோரன்சில் அமைக்கப்பட்டுள்ள புனித ஜோர்ஜின் உருவம் அவரது திறமையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

* டேவிட் சிலை அவரது மற்றுமொரு படைப்பாகும். மைக்கல் ஆஞ்சலோவைப் போல டொனெடெலோ அமைத்த டேவிட் சிலை ஒன்று உள்ளது

# கட்டடக் கலை

மறுமலர்ச்சிக் காலத்தில் கட்டடக் கலையிலும் முக்கிய மாற்றங்கள் ஏற்படலாயின. பழைய கிரேக்க உரோம கலை புத்துயிர்ப்பு அடைந்தது. மத்திய கால கட்டடக் கலையின் விசேட இலட்சணமாக அமைந்தது கூரிய வடிவுடைய கூரைகளும், உயர்ந்த பிரமிட் வடிவிலான தூண்களுமாகும். ஆனால் மறுமலர்ச்சிக் காலத்தில் உரோமக் கட்டடக்கலைக்கேற்ப வட்ட வடிவிலான கூரைகளும் உயர்ந்த தூண்களும் மற்றும் அரைவட்ட வடிவிலான கோபுரங்களும் கட்டடக்கலையின் பிரதான அங்கங்களாக இடம் பிடித்தன.

இக்காலத்தில் இருந்த சிறந்த கட்டடக் கலைஞர்களில் பிரமன்தே, மைக்கல் ஆஞ்சலோ, ரபாயேல் புரூனலேச்சி, லியனாடோ டாவின்சி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.



(புனித பேதுரு ஆலயம்) (பெசிலிக்கா)

மறுமலர்ச்சிக்கால கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக ரோமாபுரியில் உள்ள புனித பேதுரு பேரலயத்தையும் (பெசிலிக்கா) புளோரன்சிலுள்ள பேராலயத்தையும் கூறலாம். புனித பேதுரு ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தவர், திடீரென இறக்கவே அவரது சீடரான மைக்கல் ஆஞ்சலோ அந்தப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டியவரானார். திறமையான கட்டடக் கலைஞரான ரபாயேலும் புனித பேதுருவின் ஆலயத்தை அமைக்கும் திட்டமிடலில் பங்குபற்றினார். புளோரன்ஸ் நகரில் அமைக்கப்பட்டுள்ள நூலகக் கட்டடமும், மெடிசியின் கல்லறையும் மைக்கல் ஆஞ்சலோவின் கட்டடக் கலையில் முக்கியத்துவம் பெறுகின்றன.



மெடிசியின் கல்லறை

ஆலயங்களைத் தவிர புராதன ரோமர்களைப் பின்பற்றி மாளிகைகள் அமைப்பதும் இக்காலத்தில் ஆரம்பமானது. மத்திய காலத்தில் நிலவிய அரசியல், சமூக நிலைமைக்கு அமைய சுகபோக மாளிகைகள் அமைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் மறு மலர்ச்சிக் காலத்தில் சுகபோக மாளிகைகள் அமைக்க வாய்ப்புக் கிடைத்தது.

கிரேக்க, உரோம பண்பாட்டின் தாக்கத்தால் இத்தாலியில் ஆரம்பமான மறுமலர்ச்சி, படிப்படியாக ஐரோப்பா முழுவதும் பரவியது. 15ம் நூற்றாண்டில்



இலவச விநியோகத்திற்காக

ஐரோப்பாவில் அனைத்துக் கலைகளினதும் பொற்காலம் என்று கூறலாம். ஓவியக்கலை, சிற்பக்கலை என்பவற்றைப் போலவே கட்டடக் கலையும் இந்த யுகத்தில் முன்னேற்றம் கண்டது. ஐரோப்பியர் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டு உலகமெங்கும் குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றிய பின்னர் அந்தக் கலையம்சங்கள் ஏனைய நாடுகளுக்கும் பரவின.

இலங்கையில் இராகம தேவத்த என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆலயம் உரோமபுரியில் உள்ள புனித பேதுருவின் ஆலயத்தைத் தழுவி அமைக்கப்பட்ட கட்டடமாகும்.

**செயற்பாடு**

1. மத்தியகாலத்திலும், மறுமலர்ச்சிக் காலத்திலும் கலைகளுடன் சம்மந்தப்படுத்தி பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| கலைகள் | மத்தியகால பண்புகள் | மறுமலர்ச்சிக்கால பண்புகள் | மறுமலர்ச்சிக்கால விசேட ஆக்கங்கள் |
|---|---|---|---|
| சித்திரம் | | | |
| சிற்பம் | | | |
| கட்டடம் | | | |

**2.** மறுமலர்ச்சிக்கால கலாசாரங்களும், கலையாக்கங்களும் பற்றிய தகவல்களைத் திரட்டி சிறு நூலொனறை ஆக்குக.

## மானிட வாதம்

மானிடவாதம் எனும் மனிதாபிமான வாதம் மறுமலர்ச்சிக் காலத்தில் முக்கிய இடம் வகித்தது. மனிதனின் உயர்வான தன்மையை ஏற்றுக் கொள்வதே மானிடவாதம் என்பதால் கருதப்படுகிறது. மறுமலர்ச்சிக் காலத்தில் மனிதனை மையமாகக் கொண்ட விடயங்களை மென்மேலும் அறிந்து கொள்வதற்கும், முன்னேற்றுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கி.மு 6ஆம் நூற்றாண்டில் புத்தரும் அனைத்துப் படைப்புக்களிலும் மனிதன் உயர்ந்தவன் எனக் கூறியிருந்தார். மனிதன் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டுள்ளான் எனக் கிறிஸ்தவ சமயப் படிப்பினைகளின் மூலமும், சட்டங்களும் சம்பிரதாயங்களும் மனிதனின் நன்மைக்காகவே உள்ளன என்ற கிறிஸ்துநாதரின் படிப்பினைகள் மூலமும், பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் ஏனைய படிப்பினைகளின் மூலமும் கிறிஸ்தவ சமயம் மானிடவாதத்தைப் பற்றித் தெளிவுபடுத்துகிறது. மனிதன் உயர்ந்தவன் எனக் கிரேக்க, உரோமப் பண்பாடுகளிலும் கூறப்பட்டிருந்து. மறுமலர்ச்சிக் காலத்தில் கிரேக்க, உரோம நூல்கள் ஆராயப்பட்டதால் இக்கருத்து எங்கும் பரவியது. இதன் விளைவாக என்றுமில்லாதலாறு சமுதாயத்தில் மனிதனுக்கு முக்கிய இடம் கிடைத்தது.


இவற்றோடு லௌகீக வாழ்க்கையும் இயற்கையும் மதிப்பிற்குள்ளாகின. மத்திய காலத்தில் தமக்குக் கற்பிக்கப்பட்டவற்றை அவ்வாறே ஏற்றுக் கொண்ட மக்கள் மறுமலர்ச்சிக் காலத்தில் தர்க்கரீதியாக சிந்தித்துப் பார்க்கவும் தொடங்கினர்.

மறுமலர்ச்சிக் காலத்தில் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டோர் பலர் இருந்தனர். இத்தாலியில் தாந்தே, பிரான்சிஸ் பெட்ராக், ஜியோவானி பொக்காசியோ, நிக்கோலாய் மாக்கியவல்லி, இங்கிலாந்தில் தோமஸ் மூர், பிரான்சிஸ் பேக்கன் ஒல்லாந்தில் டெசிடேரியஸ் இராஸ்மஸ் ஆகியோர் அவர்களில் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். இவர்களின் செயல்களினால் இலக்கியம், வரலாறு போன்ற பாடங்களைக் கற்பதற்கு ஐரோப்பிய அறிஞர்கள் முன் வந்தனர்.

## இக்காலத்தில் வாழ்ந்த முக்கிய நூலாசிரியர்கள்

### தாந்தே (கி.பி 1265 - 1321)

- இத்தாலியில் பிறந்த தாந்தே கிரேக்க, உரோம இலக்கியங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார்.
- கிரேக்க, இலத்தின் மொழிகளைக் கற்ற அவர் அம்மொழிகளின் நூல்களை இத்தாலி மொழியில் எடுத்தியம்பினார்.
- அவரது கருத்து மத்திய காலக் கருத்துக்களுக்கு எதிரானவை
- சிறந்த கவிஞரான தாந்தே சமயக் கருத்துக்களல்லாத கருத்துக்களை எழுதினார்.
- ''டிவினா கொமிடியா'' எனும் காவியம் அவர் எழுதிய நூல்களில் முக்கியமானதாகும்.
- இலக்கியத்தின் தந்தை என அவர் இத்தாலியில் அறிமுகப்படுத்தப்படுகிறார்.


நூலாசிரியர் தாந்தே

### பிரான்சிஸ் பெட்ராக் (கி.பி 1304 - 1374)

- இவர் லத்தின் மொழியில் எழுதிய நூல்களுள் லோராவுக்கு எழுதப்பட்ட கவிதை என்னும் ஆக்கம் மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகும்.
- இவர் **மானிடவியலின் தந்தை** எனப்படுகிறார்.
- இவர் கிரேக்க ரோம படைப்புகள் தொடர்பாக அனேகமானவர்களில் உத்வேகத்தை ஏற்படுத்தியவர்.
- இவர் மனித உள்ளங்களில் எழும் உணர்வுகளை சுதந்திரமாக வெளிப்படுத்தினார்.


## ஜியோவானி பொக்காஷியோ (கி.பி 1313 ~ 1375)



ஜியோவானி
பொக்காஷியோ

- இத்தாலியில் பிறந்தவரான ஜியோவானி பொக்காஷியோ மானிடவாதத்திற்கு மதிப்பளித்த உயர்ந்த கவிஞரும், பண்டிதருமாவார்.
- இயற்கை, அன்பு, பெண் போன்றவை அவரது எழுத்துக்களின் தலைப்பாக அமைந்தது.
- அவரால் எழுதப்பட்ட நூல்களில் சிறப்பு வாய்ந்தது டெக்கமாரான் **'டீ கெமரன்'**எனும் நூலாகும்.
- மொழி பெயர்ப்பில் சிறந்து விளங்கிய அவர் கிரேக்க காவியமான ஹோமரின் 'ஒடிசி ' என்ற நூலை இத்தாலிய மொழியில் மொழி பெயர்த்தார்.

## நிக்கோலாய் மாக்கியவெலி (கி.பி 1469 ~ 1527)



**நிக்கோலாய் மாக்கியவலி**


- இத்தாலியரான நிக்கோலாய் மாக்கியவெலி கிரேக்க உரோம மொழிகளின் தாக்கத்திற்கு உள்ளானவராவார்.
- அவர் அரசியல் தொடர்பாக ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்கியதுடன் **''இளவரசன் ( The prince)''** எனும் நூலையும் எழுதினார்.
- அக்காலத்திலிருந்த ஆட்சியாளர்களும், அரசியல் தலைவர்களும் அந்நூலைக் கற்றனர்.
- அன்று முதல் இன்று வரையுள்ள அரசியலுக்கு அவரது நூல் தாக்கத்தை விளைவித்துள்ளது.

## தோமஸ் மூர் (கி.பி 1478 ~ 1535)


தோமஸ் மூர்

* ஆங்கிலேயரான இவர் எழுதிய நூல்களில் **யுடோப்பியா** (Utopia) எனும் நூல் பிரசித்தமானது.
* அக்காலத்திலிருந்த அரசியல், பொருளாதார, சமூக அமைப்புகளை மறுசீரமைத்தலில் தம் கருத்துக்களை வெளியிட்டார்.

## பிரான்சிஸ் பேகன்(கி.பி 1561 ~ 1626)


பிரான்சிஸ் பேகன்

* ஆங்கிலேயரான பிரான்சிஸ் பேகன் பிரித்தானிய இராசதந்திரியாவார். வழக்கறிஞராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், இங்கிலாந்தின் தலைமை நீதிபதியாகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.
* பழைய கிரேக்க, ரோம இலக்கியத்தின் தாக்கத்திற்கு உள்ளாகி இங்கிலாந்தின் இலக்கியம், சித்திரம், கட்டடக் கலை ஆகிய அனைத்தையும் உயர்வடையச் செய்தார்.
* **"ஆங்கில இலக்கிய எழுச்சியின் தாரகை"** என அவர் குறிப்பிடப்படுகிறார்.

## டெசிடேரியஸ் இராஸ்மஸ்(கி.பி1466 ~ 1536)




டெசிடேரியஸ் இராஸ்மஸ்

- டெசிடேரியஸ் இராஸ்மஸ் ஒல்லாந்தில் பிறந்தவராவர்.
- அவர் பாரிஸ், ஒக்ஸ்போட் ஆகிய பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்றார்.
- கிரேக்க உரோம பண்பாட்டின் தாக்கத்திற்கு உள்ளானவர்.
- அக்கால சமயத் தலைவர்களைப் பரிகசித்து **"மூடர்களைப் பாராட்டுதல் (Praise Folly)"** என்ற நூலை எழுதினார்.
- அனைத்தையும் அறிவுடனும், தர்க்க ரீதியாகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என அவர் எடுத்துக் காட்டினார்.
- அவரது கருத்துக்கள் பிற்காலத்தில் திருச்சபையின் வளர்ச்சிக்கு பெருமளவு உதவியது.

## நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்

மறுமலர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் சில பின்வருமாறு



மறு மலர்ச்சியின் முக்கிய நிகழ்வாக விளங்குவது விஞ்ஞானம் முன்னேற்ற மடைந்ததாகும். அக்காலத்தில் வளர்ச்சியடைந்திருந்த பல்கலைக்கழகங்கள் மூலம் விஞ்ஞானம், கணிதம், வைத்தியம், வானியல் போன்றவை பற்றிய ஆய்வுகள் நடாத்தப்பட்டன. கிரேக்க, உரோம நூல்களைக் கற்ற அறிஞர்கள், முன்னர் கற்பிக்கப்பட்டவற்றை அவ்வாறே ஏற்றுக் கொள்ளாது உண்மையை அறிய முற்பட்டனர். அவர்கள் ஒரு விடயத்தை மாத்திரமல்லாது பல்வேறு விடயங்களையும் ஆராய்ந்தனர். புவி, சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் போன்ற சகலதையும் ஆராய்ந்துள்ளனர். இதன் விளைவாக விஞ்ஞானம் தொடர்பாக புதிய கருத்துக்கள் மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்டன. மேலும் மத்திய காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் பல இக்கால கட்டத்தில் (மறுமலர்ச்சி காலத்தில்) மறுக்கப்பட்டன.

மறுமலர்ச்சிக் காலத்தில் ஆராய்ச்சிகளை நடாத்திய அறிஞர்கள் பற்றியும், அவர்களது கண்டு பிடிப்புக்கள் பற்றியும் இப்போது பார்ப்போம்.

## நிக்கலஸ் கொப்பனிக்கஸ் (கி.பி 1473-1543)


- குருத்துவ வாழ்வில் அடியெடுத்து வைத்த நிக்கலஸ் கொப்பனிக்கஸ், பொலஞ்னா பல்கலைக்கழகத்தில் சட்டத்தையும், பாதுவா பல்கலைக்கழகத்தில் வைத்தியத்தையும் கற்றார்.

- தமது ஓய்வு நேரத்தில் வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அதன் விளைவாக உலகம் கோளவடிவானதெனவும், கோள்கள் சூரியனைச் சுற்றி வருவதாகவும் கூறினார். இந்தக் கருத்து அக்காலத்தில் நிலவிய கருத்துக்களுக்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

- மத்திய காலத்தில் நிலவிய கருத்தான உலகம் தட்டையானது என்ற தொலமியின் கருத்தையும், சூரியன் உட்பட அனைத்துக் கோள்களும் பூமியைச் சுற்றி வருவதாகவும் இருந்த கருத்தினையும் கொப்பனிக்கஸ் நிராகரித்தார்.


- அவரது இந்தக் கண்டுபிடிப்பு கோள்கள், நட்சத்திரங்கள் தொடர்பான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கு வழி அமைத்தது.

- கொப்பர்னிக்கஸ் விஞ்ஞானத்திற்கு ஆற்றிய அரும் பணியால் **“வானியல் விஞ்ஞானத்தின் தந்தை”** எனப்படுகிறார்.



கொப்பனிகஸ்

## கலிலியோ கலிலி (கி.பி 1564~1642)



கலிலியோ கலிலி

- ❋ கலிலியோ கலிலி இத்தாலியில் பீசா நகரில் பிறந்தார். அவர் பீசாப் பல்கலைக் கழகத்தில் வைத்தியமும் கணிதமும் கற்றார்.

- ❋ பீசா பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த அவர் பாதுவாப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் கற்பிக்கும் பொருட்டு மத்திய நிலையமொன்றை ஆரம்பித்தார்.

- ❋ கணிதம் தொடர்பான பல ஆய்வுகளைச் செய்த அவர் சம நிறையில்லாத இரு பொருட்கள் ஒரே வேளையில் புவியை நோக்கி அனுப்பப்படும் போது அவைகள் வெவ்வேறு நேரங்களில் புவியை வந்தடைவதாக அரிஸ்டோட்டல் கூறிய கருத்துக்களை நிராகரித்தார்.



**தொலைநோக்கி**

- ❋ கலிலியோ கலிலி பீசா கோபுரத்திலிருந்து சமனில்லாத பல பொருட்களை ஒரே நேரத்தில் கீழே இட்ட போது அவை ஒரே நேரத்தில் புவியை வந்தடைவதை நிரூபித்தார். ஊசல் தத்துவ விதியை அறிமுகப்படுத்தினார்.

- ❋ கலிலியோவால் கண்டுபிடிக்கப்பட்ட முக்கிய கருவி தொலைநோக்கியாகும்.

- ❋ அவர் தொலை நோக்கியைக் கண்டு பிடித்து, வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு அது தொடர்பான பழைய கருத்துக்களை நிராகரித்தார்.

1. சந்திரனில், மலைகளும், பெருங் குழிகளும் உள்ளன.
2. சூரியனில் புள்ளிகள் உள்ளன.
3. சனிக் கோளைச் சுற்றி வளையங்கள் உள்ளன.
4. வியாழனுக்குத் துணைக் கோள்கள் உள்ளன.
5. பூமி சூரியனைச் சுற்றி வருகிறது.


மேற் கூறப்பட்ட கருத்துக்களைத் தொலைநோக்கி மூலம் அவர் அவதானித்தார். செயற்பாட்டின் மூலம் விளங்கிக் கொள்வதன் முக்கியத்துவத்தை அவர் தமது மாணவர்களுக்கு விளக்கிக் காட்டியதால் “செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை” என அவர் அழைக்கப்படுகின்றார்.

## ஜொஹன்னஸ் கெப்லர் (கி.பி 1574 ~ 1630)



கெப்லர்


- ❋ மறுமலர்ச்சி காலத்திலிருந்த சிரேஷ்ட விஞ்ஞானியாகக் கெப்லர் கணிக்கப்படுகின்றார்.
- ❋ தெற்கு ஜேர்மனியில் பிறந்த கெப்லர் கணிதவியலாளராகவும், நட்சத்திர சாஸ்திரத்தில் தேர்ந்தவராகவும் இருந்தார், கெப்லர் கொப்பனிக்கஸ் கூறிய கருத்துக்களை உறுதி செய்து அதனை முன்னெடுத்துச் சென்றார்.



நீள்வட்டப் பாதை

- ❋ புவி உட்பட ஏனைய கோள்கள் அனைத்தும் சூரியனை வட்டவடிவமான பாதையில் சுற்றி வருவதாகக் கூறப்பட்ட கருத்தை மறுத்து அவை நீள்வட்டப் பாதையில் சுழன்று வருவதாக முதலில் குறிப்பிட்டவர் கெப்லர் ஆவார். இக்கருத்து விஞ்ஞானத் துறையில் பெரும் புரட்சிக்கு வழிவகுத்தது.

## ஐசக் நியூற்றன் (கி.பி 1642 ~ 1727)



ஐசக் நியூற்றன்

- ❋ இங்கிலாந்தில் பிறந்த ஐசக் நியூட்டன் சிறந்த நட்சத்திரவியலாளராக விளங்கினார்.
- ❋ நவீன பௌதீக விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களை முன்வைத்த அவர், உலகில் தோன்றிய சிறந்த விஞ்ஞானியாவார்.
- ❋ மரத்திலிருந்து அப்பிள் பழம் விழுந்த சம்பவத்தைக் கொண்டு புவியீர்ப்பு சக்தி பற்றிய கருத்தை வெளியிட்ட ஐசக் நியூட்டன், கேத்திர கணிதம் உட்பட பல புதிய கண்டுப்பிடிப்புக்களை முன்வைத்தார்.

❋ கலிலியோவால் ஆரம்பிக்கப்பட்ட நவீன விஞ்ஞானக் கொள்கைகளை ஐசக் நியூட்டன் முன்னெடுத்துச் சென்றார்.

## லியனாடோ டாவின்சி (கி.பி 1452 ~ 1519)

❋ சிறந்த சிற்பியாக விளங்கிய லியனாடோ டாவின்சி விஞ்ஞானத்திலும் பின்நிற்கவில்லை.

❋ வானியல், தாவரவியல், உடலியல் சம்பந்தமான ஆய்வுகளையும் மேற்கொண்டார்.

❋ மனித உடலமைப்பு, அதன் இயக்கம், விமானம், யுத்தத் தாங்கி போன்றவற்றையும் வரைந்தார். இவற்றைப் பார்க்கும் போது அவர் சிறந்த பொறியியலாளராகவும் இருந்துள்ளார்.

❋ சிறந்த கட்டடக் கலைஞரான அவர் நகர நிர்மாணம், மாளிகை நிர்மாணம், சுரங்கப் பாதை நிர்மாணம் தொடர்பாகவும் கருத்துரைத்துள்ளார்.


மறுமலர்ச்சிக் காலத்தில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுள் அச்சியந்திரம், திசையறிகருவி, என்பனவும் முக்கியமானவையாகும். சீனரால் பயன்படுத்தப்பட்ட திசையறி கருவி அராபியர்கள் பயன்படுத்திய வட துருவ கணிப்பீடு போன்றவை பற்றிய அறிவும் ஐரோப்பாவை எட்டியிருந்தது. மறுமலர்ச்சிக் காலத்தில் இவை நன்கு விருத்தி செய்யப்பட்டு, நாடுகாண் பயணங்களின் போது பயன்பட்டன. இவற்றினாலேயே பாதுகாப்பான பிரயாணங்களை மேற்கொண்டு வெற்றியீட்ட முடிந்தது.

## வைத்தியத் துறையில் புதுயுகம்

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கு மேலதிகமாக மறுமலர்ச்சிக் காலத்தில் வைத்தியத் துறையிலும் புதிய கண்டுபிடிப்புக்கள் பல கண்டறியப்பட்டமையால் அத்துறையிலும் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. அத்துறையில் பங்காற்றியோரின் விபரம் வருமாறு.


## பெரசல்சஸ் (கி.பி 1493~1547)

சுவிற்ஸ்லாந்து நாட்டவரான இவர் பல இடங்களுக்கும் பிரயாணம் செய்து நோய் ஏற்படுவதற்கான காரணங்களையும், அவற்றை குணமாக்கும் வழிவகைகள் பற்றிய ஆய்வினையும் மேற்கொண்டார். நவீன வைத்தியதுறையில் அவரது கண்டுபிடிப்புக்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.


பெரசல்சஸ்

## மைக்கல் சர்வேட்ஸ் (கி.பி 1511-1553)

ஸ்பானியரான இவர் மனித உடலையும், குருதிச் சுற்றோட்டத்தையும் பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். மனித உடலின் குருதி இதயத்தின் வலது பக்கத்திலிருந்து புறப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் இதயத்தை அடைந்து உடல் முழுவதும் பரவிச் செல்கிறது என்பதை முதன் முதன்முதல் வெளிப்படுத்தினார்.


வில்லியம் ஹார்வே

எனினும் குருதிச்சுற்றோட்டத்தைப் பற்றிய முழுமையான விளக்கத்தைத் தந்த பெருமை பாதுவா பல்கலைக்கழகத்தில் பயின்ற ஆங்கிலேயரான வில்லியம் ஹார்வே (1578-1657) என்பவரையே சாரும்.

## அரசியல் மறுமலர்ச்சி

15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தேசிய அரசுகள் உதயமாகின. மானிய முறைக் காலத்தில் பிரபுக்களுக்கு அரசனை விடக் கூடிய அதிகாரங்கள் இருந்தன. ஆனால் இக்காலத்தில் பிரபுக்களின் அதிகாரம் குன்றி, அரசர்களின் அதிகாரம் மேலோங்கத் தொடங்கியது. தேசிய அரசுகளின் அரசர்கள் புதிதாக செல்வந்தர்களின் உதவியைத் தமது ஆட்சி தொடர்பான விடயங்களில் பெற்றுக் கொண்டனர். இதனால் பிரபுக்களின் அதிகாரம் குறைந்து மானிய முறை வீழ்ச்சியடைந்து, சக்தி வாய்ந்த மத்திய அரசு உருவானது. ஸ்பானியா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகள் மறுமலர்ச்சிக் காலத்தில் எழுச்சியடைந்த தேசிய அரசுகளாகும். ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் பின்னர் தேசிய அரசுகளாக உருவாகின.

### செயற்பாடு

1. ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக்குக் காரணமாயிருந்த காரணிகளைப் பட்டியற்படுத்துக.
2. மத்தியகால ஐரோப்பாவுக்கும், நவீன ஐரோப்பாவுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

## பொருளாதாரப் புத்தெழுச்சி

மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவில் பொருளாதார நடவடிக்கைகளில் பரந்துபட்ட மாற்றங்கள் ஏற்பட்டன.

- மத்திய காலத்தில் ஏற்பட்ட மானிய முறையில் சுயதேவைப்பூர்த்தி விவசாயப் பொருளாதார முறை தளர்வடைந்து சென்றது. (நீங்கள் இதுபற்றி 7ஆம் தரத்தில் கற்றவற்றை நினைவுபடுத்திக் கொள்ளவும்)

- வர்த்தக நடவடிக்கைகள் விரிவடைந்தன. நாடுகாண் பயணங்களின் பிரதிபலிப்பாக புதிய கடல் வழிகள் கண்டுபிடிக்கப்பட்டு ஐரோப்பியர்கள் கீழைத்தேசத்திற்கும் புதிய உலகத்திற்கும் சென்றமையால் அங்கு கிடைக்கப்பெற்ற வியாபாரப் பொருட்கள் ஐரோப்பாவுக்குப் பெருமளவில் வந்து குவிந்தன.

புதிய உலகம் எனக் குறிப்பிடப்படுவது வட, தென் அமெரிக்கக் கண்டங்களாகும்.

- வாசனைத்திரவியங்கள் தங்கம், வெள்ளி, முத்து, மாணிக்கம், பட்டுப்புடவை, யானைத்தந்தம், கம்பளம் என்பவை வர்த்தகப் பொருட்களில் முக்கிய இடம் பெற்றன.

- வர்த்தக நடவடிக்கைகள் விரிவடைந்ததைத் தொடர்ந்து பணப்புழக்கம் அதிகரித்துச் சென்றது. தாள் நாணயங்களும், சில்லறை நாணயங்களும் பெருமளவு புழக்கத்துக்கு வந்தன. என்றாலும் கொடுக்கல், வாங்கல்களுக்கு தூரதேசங்களுக்கு எடுத்துச் செல்வது சிரமமானதாகவும், பாதுகாப்பு அற்றதாகவும் காணப்பட்டமையால் வங்கி முறை இக்காலத்தில் ஆரம்பமானது. வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்குத் தேவையான நிதியை இவ்வங்கிகள் கடனாக வழங்கின.

- வர்த்தக நடவடிக்கைகள் பெருகிச் சென்றதைத் தொடர்ந்து நகரங்கள் தோன்றின. இங்கிலாந்தில் லண்டன், ஒல்லாந்தில் அம்ஸ்டடாம், போர்த்துக்கல்லில் லிஸ்பன், ஸ்பானியாவில் மட்ரீட், பிரான்ஸில் பரீஸ் போன்ற இன்றுவரை முன்னணியில் உள்ள நகரங்கள் தோன்றியது மறுமலர்ச்சிக் காலத்திலேயாகும். அவற்றில் பெரிய கட்டடங்கள், கடைகள், பெருந்தெருக்கள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள் போன்ற நவீன அம்சங்கள் உருவாகியதுடன் பணக்காரர்கள் அங்கு குடியேறி சுகபோக வாழ்க்கையை அனுபவித்தனர்.

**செயற்பாடு**

1. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஸ்பானியா போன்ற நாடுகளில் இன்றும் பிரசித்தமாயுள்ள நகரங்கள் ஐந்தை உட்படுத்தி அட்டவணை ஒன்றைத் தயாரிக்க.
2. ஆசிரியருடன் வங்கியொன்றுக்குச் சென்று அங்கு செயற்படும் பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விடயங்களை அதிகாரிகள் மூலம் தெரிந்து கொண்டு சிற்றேடு ஒன்றைத் தயாரிக்குக.

## புதிய வர்த்தகப் பாதைகளின் கண்டுபிடிப்பு

**மேற்கு நாடுகளுக்கும் கொன்ஸ்தாந்திநோபிளுக்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்த மூன்று முக்கிய வழிகள் இருந்தன.**


- சீனாவிலிருந்து மத்திய ஆசியா வழியாக பாரசீகம் ஊடாகக் கொன்ஸ்தாந்திநோபிள்.
- இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலிருந்து அரபிக் கடல், ஏடன், செங்கடல் வழியாக அலெக்சாந்திரியா வழியாக கொன்ஸ்தாந்தி நோபிள்.
- இந்தியாவிலிருந்து பாரசீகக் குடா வழியாக மஸ்கட், ஓம்ஸ், பஸ்ரா, பக்தாத் வழியாக கொன்ஸ்தாந்திநோபிள்

முஸ்லீம்களால் கொண்டு வரப்பட்ட ஆசியப் பொருட்களை கொன்ஸ்தாந்தி நோபிளில் இத்தாலிய வணிகர் (விசேடமாக வெனிஸ் ஜெனோவா வணிகர்) பணம் கொடுத்து வாங்கினர். அங்கிருந்து பொருட்களை ஐரோப்பா முழுவதும் கொண்டு சென்று விற்றனர். இதன் மூலம் அவர்கள் அதிக வருமானம் பெற்றனர். எனினும் துருக்கியர் கொஸ்தாந்திநோபிளை, கைப்பற்றியதுடன் சகல வர்த்தகப்பாதைகளும் தடைப்பட்டன. அத்தோடு பொருட்களின் விலையும் அதிகரித்தது. முஸ்லிம்கள் தேவையான வேளைகளில் பொருட்களைப் பெற்றுத் தரவுமில்லை. இதனால் ஐரோப்பியர்களுக்கு ஆசியாவின் பொருட்களை பெறுவதில் தடை ஏற்பட்டது.

இக்காரணங்களால் ஆசியாவின் பொருட்களைப் பெறுவதற்குக் கீழ்நாடுகளுக்குச் செல்வதற்காக வழியைக் கண்டு பிடிக்க ஐரோப்பியர் முனைந்தனர். இதில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் மிகவும் அக்கறை செலுத்தின. இதன் விளைவாக ஐரோப்பியர் நாடுகாண் பயணத்தில் ஈடுபட்டனர்.

கொன்ஸ்தாந்துநோபிள் துருக்கியர் வசமானதே வர்த்தகப் பாதை கண்டுபிடிப்பதற்கான முக்கிய காரணமாக அமைந்தது. அவை தவிர வேறு காரணங்களும் உண்டு.


இலவச விநியோகத்திற்காக




மேற்கு~கிழக்கு வர்த்தகப் பாதை

## புதிய விஞ்ஞானக் கண்டுப்பிடிப்புக்கள்

மறுமலர்ச்சிக்காலத்தில் ஏற்பட்ட விஞ்ஞான முன்னேற்றம் வர்த்தகப் பாதைகளைத் தேடிச் செல்வதில் மிகவும் முக்கியத்துவமானதாய் இருந்தது. அவ்வாறான கண்டுபிடிப்புக்கள் பின்வருமாறு:

- திசையறிகருவி போன்ற கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டமை.
- தொலமியின் வரைபடம் உட்பட பழைய படங்கள் தொடர்பான கருத்து மாற்றமடைந்ததால் புவியைப் பற்றிய சரியான கருத்தைத் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தமை.
- புவியானது கோள வடிவானது என்பது உறுதிப்படுத்தப்பட்டமையால் ஐரோப்பாவிலிருந்து கிழக்காக வந்தால் ஆசியாவை அடையலாம் என்பது தெளிவாகியமை.
- விஞ்ஞான மறுமலர்ச்சியால் விஞ்ஞானிகளின் உதவியுடன் கப்பல் பிரயாணத்திற்காக பாரிய கப்பல்கள் கட்டப்பட்டமை.



தொலமியின் உலகப்படம்

## நாடுகாண் பயணங்களுக்கு தேசிய அரசுகளின் அனுசரணை கிடைத்தல்

15ம் நூற்றாண்டின் இறுதியில் மானிய முறை வீழ்ச்சியடைந்து ஐரோப்பாவில் தேசிய அரசுகள் உதயமாகின. இந்தத் தேசிய அரசுகள் தம் நாடுகளின் பொருளாதாரத்தை மேம்படுத்த முன்வந்தன. அதன் பொருட்டு அந்நாடுகளின் ஆட்சியாளர்கள் நாடுகாண் பயணங்களுக்கு ஒத்துழைப்பு நல்கினர். போர்த்துக்கல் மன்னன் கடலோடி ஹென்றி, ஸ்பானியாவின் பேர்டினன்ட் மன்னன், அரசி இசபெலா, இங்கிலாந்தின் 7ம் ஹென்றி ஆகியோர் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.



கடலோடி ஹென்றி


கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசம் வருமுன்னரே போர்த்துக்கேயர் நாடுகாண் பயணத்தில் ஈடுபட்டனர். கடலோடி ஹென்றியின் வழிகாட்டலில் போர்த்துக்கல் கடற் பிரயாணத்தில் ஈடுபட்டது. அவன் லிஸ்பனில் ஒரு பயிற்சிப் பாடசாலையை அமைத்துக் கடற்பிரயாணப் பயிற்சி அளித்தான். கடலின் நிலைமையை அறிந்து கொள்வதற்கு இதன்மூலம் கடற்பயணிகளுக்குத் தெளிவான விளக்கம் கிடைத்தது. நவீன பிரயாண முறை, பலம் வாய்ந்த கப்பல் கட்டுதல் போன்றவை அங்கு ஆய்வு செய்யப்பட்டது. ஐரோப்பாவின் பல நாடுகளிலிருந்தும் புவியியலாளர்கள், மாலுமிகள், நட்சத்திரவியலாளர்கள் போன்றோர் அங்கு வந்து கற்றனர். ஆய்வுகளினதும், செயன்முறைகளினதும் விளைவாகப் 15ம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துக்கேயர் மேற்குக் கரையோரமாகப் பிரயாணம் செய்து ஆபிரிக்காவின் தென்பகுதிவரை வரக் கூடியதாக இருந்தது. இதனால்

கேப்வர்ட், கினி, செனகல் பிரதேசம் போன்றவற்றை போர்த்துக்கேயர் அண்மிக்கக் கூடியதாக இருந்தது. அதன்படி கடலோடி ஹென்றியின் வழிகாட்டலில் போர்த்துக்கேயர் இந்தியாவுக்கு வந்து பின்னர் ஆசியாவில் குடியேற்றங்களை அமைக்கக் கூடியதாக இருந்தது.

ஸ்பானியாவின் பேர்டினட் மன்னனும், இசபெலா அரசியும் நாடுகாண் பயணத்திற்கு மிகவும் ஊக்கமளித்த இருவராவர். அவர்களது உதவியால் கிறிஸ்டோபர் கொலம்பஸ் மேற்கு இந்தியத் தீவுகளை கண்டு பிடிக்கக் கூடியதாக இருந்தது. அவ்வாறே அவர் அமெரிக்காவையும் கண்டுபிடித்தார். மகெலன் உலகைச் சுற்றிவரத் தேவையான உதவியை ஸ்பானிய மன்னன் வழங்கினான்.

**இவற்றோடு புதிய வர்த்தகப் பாதைகளைக் கண்டு பிடிப்பதற்கு உந்துதலாக இருந்தவை பின்வருமாறு**

- முஸ்லீம்கள் கையில் இருந்த கீழைத்தேச வர்த்தகத்தை பெற்றுக் கொள்ளல்.
- இக்காலத்தில் "பெஸ்டர் ஜோன்" எனும் பேரரசின் கீழ் பரந்த கிறிஸ்துவ பேரரசு உள்ளது எனும் நம்பிக்கையில் அதனைத் தேடிச் செல்லல்.
- கீழைத்தேசங்களில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புதல்.
- உலகத்தைப் பற்றி அறிந்து, அதனை அனுபவ ரீதியாக உணரமுயலுதல்.
- போர்த்துக்கல், ஸ்பானியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஒல்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகள் கடலை அண்மித்து இருப்பதால்கடலில் யாத்திரைசெய்ய அவர்கள் எளிதில் தூண்டப்பட்டிருக்கலாம்.




நாடுகாண் பயணப் பாதை

# நாடுகாண் பயணமும் அதனுடன் தொடர்புடைய நபர்களும்

## பார்த்தலோமியோ டயஸ்

- போர்த்துக்கேயரான பார்த்தலோமியோஸ் டயஸ் கி.பி 1488ம் ஆண்டு ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரமாக வந்து ஆபிரிக்காவின் தென் முனையை அடைந்தார்.
- புயலின் காரணமாக அதற்கு மேல் அவரால் செல்லமுடியவில்லை.
- அந்த இடத்திற்குப் ''புயல்முனை'' எனப்பெயரிட்டு மீண்டும் போர்த்துக்கலுக்குச் சென்றார்.
- இது இந்தப் பயணிகள் பெற்ற வெற்றியெனக் கண்ட போர்த்துக்கல் மன்னன் அவ்விடத்தை ''நன்னம்பிக்கை முனை'' எனப்பெயரிட்டான்.

## வாஸ்கொடகாமா

- நான்கு கப்பல்கள் அடங்கிய குழுக்களில் 1497ம் ஆண்டு வாஸ்கொடகாமா லிஸ்பன் துறைமுகத்திலிருந்து புறப்பட்டார்.
- பார்த்தலோமியோ டயஸ் சென்ற வழியிலே சென்று 1498ம் ஆண்டு இந்தியாவில் கள்ளிக்கோட்டையை அடைந்தார்.
- இதன் மூலம் போர்த்துக்கேயர் கீழை நாடுகளில் குடியேற்றங்களை அமைப்பதற்கு அடித்தளம் அமைக்கப்பட்டது.
- இந்தியாவுக்கு வந்த வாஸ்கொடகாமா ''நாங்கள் வாசனைத்திரவியங்களையும், கிறிஸ்தவர்களையும் தேடி வந்தோம்'' என்றார்.
- வர்த்தகத்தைக் கைப்பற்றுவதும், கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதும் அவர்களது நோக்கம் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.



வாஸ்கொடகாம

## கப்ரால்

ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரமாக இந்தியாவை நோக்கிப் பயணம் செய்த போர்த்துக்கேயரான கப்ரால், புயல் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டு கி.பி 1500ம் ஆண்டு தென் அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ள பிரேசிலை அடைந்தான் இதனால் தென் அமெரிக்காவிலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டப் போர்த்துக்கேயரால் முடிந்தது.

## கிறிஸ்டோபர் கொலம்பஸ்

* ஸ்பானிய இனத்தவரான கொலம்பஸ் அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து மேற்கு நோக்கிப் பிரயாணத்தை ஆரம்பித்தார்.
* 1492ம் ஆண்டு கரீபியன் தீவுகளில் (ஹிஸ்பெனியோலா, கியூபா) இறங்கினார்.
* இடையிடையே மேற்கொண்ட பயணங்களின் விளைவாக அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டது.
* அமெரிக்கா எனும் புது உலகைக் கண்டுபிடித்த பெருமை கொலம்பஸையே சாரும்.


கொலம்பஸ்

## அமெரிக்கோ வெஸ்புஸி

* இத்தாலி நாட்டினரான அமெரிக்கோ வெஸ்புஷி ஸ்பானியாவின் ஆதரவுடன் நாடுகாண் பயணத்தில் இறங்கினார்.
* கொலம்பஸ் சென்ற வழியாக அமெரிக்காவை அவரால் அடையக் கூடியதாக இருந்தது.
* இவருக்கு மதிப்பளிக்கும் பொருட்டே புதிய கண்டத்திற்கு அமெரிக்கா எனப் பெயரிடப்பட்டது.


**அமெரிக்கோ வெஸ்புஸி**


## பேர்டினன்ட் மகலன்

* இத்தாலிய இனத்தவரான மகலன் நாடுகாண் பயணத்தின் பொருட்டுப் போர்த்துக்கலின் உதவியைப் பெறாத போதிலும் ஸ்பானிய அரசனின் உதவியைப் பெற்றுக் கொண்டார்.
* ஐந்து கப்பல்களில் 267 ஆட்களுடன் 1519ம் ஆண்டு அத்திலாந்திக் சமுத்திரத்தை கடந்து மேற்கு நோக்கிப் பயணமானார்.
* தென் அமெரிக்காவில் தென் முனையைக் கடந்து, பசுபிக் சமுத்திரத்தினூடாக பயணத்தை மேற்கொண்ட மகலன் பலவித கஷ்டங்களின் மத்தியில் பிலிப்பைன்ஸ் தீவுகளில் இறங்கினார்.

❋ அங்கு வாழ்ந்த சுதேச மக்களுடன் ஏற்பட்ட சண்டையில் மகலன் உயிர் துறந்தார்.

❋ விக்டோரியாக் கப்பல் மிகுதியாக இருந்தோருடன் ஆபிரிக்காவைச் சுற்றிப் பயணம் செய்து ஸ்பானியாவை அடைந்தது.

❋ உலகை முதன்முதல் சுற்றி வந்த பெருமை இவர்களுக்கு உரியதானது. உலகம் கோளவடிவானது என்பதும் இதனால் உறுதிப்படுத்தப்பட்டது.




**மகலனின் பயணப் பாதை**

இதற்கு மேலாக இங்கிலாந்து பிரான்ஸ், ஒல்லாந்து முதலிய ஏனைய ஐரோப்பிய நாடுகளும் நாடுகாண் பயணங்களுக்கு ஆதரவு அளித்துள்ளன. கீழே தரப்பட்டிருப்பது அவ்வாறான பயணங்களில் சிலவாகும்.

❋ ஸ்பானிய இனத்தவரான வஸ்கோ நியுனெஸ் த-பெல்போவா என்பவர் கி.பி 1513ல் தங்கத்தைத் தேடி அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கு பனாமாவை அவரால் அண்மிக்க முடிந்தது.

❋ ஸ்பானியாவைச் சேர்ந்த பர்னான்டோ கோடெஸ் கி.பி 1519ம் ஆண்டு மெக்சிக்கோவுக்கும், கி.பி 1553ல் பிரான்சிஸ்கோ பிசாரோ பேரு நாட்டுக்கும் சென்றனர்.

❋ இத்தாலியர்களான ஜோன் கபோட், செபஸ்தியன் கபோட் என்போர் கி.பி 1497ல் இங்கிலாந்தில் 7ம் ஹென்றி மன்னனின் உதவியுடன் அந்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து பிரயாணம் செய்தனர். அவர்கள் நியுபவுண்லாந்திற்கு

அருகில் கேப்பிரிட்டன் தீவை அண்மித்து கனடாவில் கரையோரப் பகுதியை கண்டனர்.

- பிரான்சியரான ஜெக்விஸ் காட்டியர் கி.பி 1535ல் வட அமெரிக்காவில் புனித லோரன்ஸ் பிரதேசத்தைக் கண்டு பிடித்தார். கி.பி 1573ல் ஜொய்லட், தலா சலே, ஆகியோர் மிசிசிப்பி ஆற்றின் பகுதியைக் கண்டனர். பிரான்சியரான சம்ப்ளேன் மார்க்விடே கி.பி 1608ம் ஆண்டு குவிபெக் பிரதேசத்தைக் கண்டு பிடித்தார்.
- ஆங்கிலேயரான ஹென்றி ஹட்சன் ஒல்லாந்தின் உதவியுடன் சீனாநோக்கிப் பயணமானார். கி.பி 1609ல் அவர் அமெரிக்காவில் ஹட்சன் ஆற்றையும் ஹட்சன் குடா பிரதேசத்தையும் கண்டு பிடித்தார்.

**பயிற்சி**

- நாடுகாண் பயணத்திற்கான காரணங்களை விபரிக்குக.
- நாடுகாண் பயணத்தை மேற்கொண்டோரையும், அவர்கள் கண்டு பிடித்த நாடுகளையும், ஆண்டுகளையும் அவர்களது பயணத்திற்கு உதவிய நாடுகளையும் அட்டவணைப்படுத்துக.

**செயற்பாடு**

நாடுகாண் பயணங்களை மேற்கொண்டவர்களையும், அவர்கள் கண்டுபிடித்த நாடுகளையும் பற்றிய தகவல்களை சேகரித்து சிறு புத்தகமொன்று தயாரிக்குக.

**சாராம்சம்**

கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசப்பட்டமையால் புதையுண்டு போயிருந்த கிரேக்க, உரோம நாகரிகங்கள் மீளெழுந்து ஜனரஞ்சகமாயின. இதனால் மத்தியகாலத்தில் இருண்ட யுகத்திலிருந்து மீண்டும் ஒளியை நோக்கி பயணப்படுவதற்கும் ஐரோப்பியர்களுக்கு சந்தர்ப்பம் கிட்டியது. அரசியல், பொருளியல், சமயம், கல்வி சார்ந்த துறைகள் அனைத்திலும் பெருமுன்னேற்றம் ஏற்பட்டு பல விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் ஐரோப்பாவை புதியதொரு பாதையில் செல்ல வைத்தன. புவி கோளவடிவினது என்ற கருத்தின் பரவலும், திசையறி கருவியின் கண்டுபிடிப்பும் ஐரோப்பியருக்கு நாடுகாண் பயணங்களில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கின. மறுமலர்ச்சிக்காலத்திற்கேற்ப அப்புதிய கண்டுபிடிப்புக்களால் ஐரோப்பாவில் நிலவிய மானிய முறையின் எண்ணக்கருக்களிலிருந்து மீண்டும் புதிய யுகத்தில் கால் வைக்கவும், உலகம் முழுவதிலும் தமது செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ளவும் ஐரோப்பியருக்கு முடியுமாயிருந்தது.

**நாடுகாண் பயணத்தில் அக்கறை காட்டிய ஐரோப்பிய நாடுகள், அதில் ஈடுபட்டோர், கண்டுபிடிக்கப்பட்ட நாடுகள் என்பன பற்றிக் கற்போம்**

| அக்கறை காட்டிய நாடுகள் | ஆண்டு | பயணத்தை மேற்கொண்டோர் | கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசம் |
|---|---|---|---|
| போர்த்துக்கல் | 1488 | பார்த்தலோமியோ டயஸ் | தென் ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனை |
| போர்த்துக்கல் | 1498 | வஸ்கொடகாமா | இந்தியாவின் கள்ளிக் கோட்டை |
| போர்த்துக்கல் | 1500 | கப்ரால் | பிறேசில் (தென் அமெரிக்கா) |
| ஸ்பானியா | 1492 | கிறிஸ்டோபர் கொலம்பஸ் | ஸ்பெனியோலா தீவு கரிபியன் தீவு |
| ஸ்பானியா | 1498 | அமெரிக்கோ வெஸ்புஷி | அமெரிக்கா |
| ஸ்பானியா | 1513 | வஸ்கோ நியுனெஸ் த பெல்போவா | பனாமா |
| ஸ்பானியா | 1519 | பேர்டினன்ட் மகலன் | பிலிப்பைன்தீவுஉலகை முதன் முதலில் சுற்றி வந்தவர் |
| ஸ்பானியா | 1519 | பேர்டினன்ட் கோடெஸ் | மெக்சிக்கோ |
| ஸ்பானியா | 1553 | பிரன்சிஸ்கோ பிாசரோ | கேப் பிரிட்டன் தீவு |
| இங்கிலாந்து | 1497 | ஜோன் கபோட், செபஸ்தியன் கபோட் | புனிதலோறன்ஸ் ஆறு (வட அமெரிக்கா) |
| பிரான்ஸ் | 1535 | ஜெக்விஸ் காட்டியர் | மிசிசிப்பி நதி சமவெளி |
| பிரான்ஸ் | 1573 | ஜொயிலட் | குவிபெக் |
| பிரான்ஸ் | 1573 | தலாசலே | |
| பிரான்ஸ் | 1608 | செம்ப்லேன் மார்க்விடோ | ஹட்சன் நதி, |
| ஒல்லாந்து | 1609 | ஹென்றி ஹட்சன் | ஹட்சன் குடா |